[2015 செப்டம்பர் 28

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களுக்குச் சொல்லிக்கொள்வதெல்லாம், இப்போது மாநகரப் பகுதியிலே புதிய சிறிய பேருந்துகள் இயக்கப்படுகின்றன. மற்ற புறநகர்ப் பகுதிகளுக்கும் அது தேவை என்பது மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும். இதுகுறித்து அரசு கொள்கை முடிவு எடுக்க வேண்டுமென்ற காரணத்தினால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 356, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

356—

நீதிமன்றம்

***43466 திரு. இரா. அண்ணாதுரை:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரையில் மகளிர் விரைவு நீதிமன்றம் மற்றும் கூடுதலாக ஒரு குடும்பநல நீதிமன்றம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்குகிறேன்.*

(அ) மற்றும் (ஆ) மதுரையில் மகளிர் விரைவு நீதிமன்றம் மற்றும் குடும்பநல நீதிமன்றம் கூடுதலாக அமைப்பது குறித்து உயர் நீதிமன்றத்திலிருந்து செயற்குறிப்பு ஏதும் பெறப்படவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை அவர்கள்.*

திரு. இரா. அண்ணாதுரை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையில் இரண்டு மகளிர் விரைவு நீதிமன்றங்கள் நல்லமுறையில் செயல்பட்டு வருகின்றன. அதே நேரத்தில், மதுரை மாவட்டத்தில் ஒரு குடும்ப நல நீதிமன்றம்தான் செயல்பட்டு வருகிறது. குடும்ப நல நீதிமன்றத்தில் விவாகரத்து, குழந்தைகளுக்கான காப்பாளர் நியமித்தல், வாரிசுகளுக்கு உரிமைகோரும் வழக்குகள் உட்பட பல்வேறு வழக்குகள், ஓர் ஆண்டுக்கு சுமார் 1500 முதல் 2000 வழக்குகள் வரையிலும் பதிவு செய்யப்படுகின்றன. வழக்குகளில் சம்பந்தப்பட்டவர்களை நேரில் ஆஜர்படுத்தி, தேவையென்றால்* counselling *நடத்த வேண்டியுள்ளது. எனவே, தற்போது செயல்பட்டுவரும் ஒரு குடும்பநல நீதிமன்றத்தோடு, மேலும் ஒரு குடும்பநல நீதிமன்றத்தை மதுரை மாநகரின் தென் பகுதியில் அமைத்துத் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியிலே நான்கு ஆண்டுகளில் 170 புதிய நீதிமன்றங்கள் 134 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டு, செயல்பட்டு வருகின்றன. மாண்புமிகு*

தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மேலும் 44 புதிய நீதிமன்றங்களை ரூ.21,60,000/— செலவில் அமைக்க தற்போது உத்தரவிட்டுள்ளார்கள். ஆனால், கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியிலே 119 புதிய நீதிமன்றங்கள் மட்டுமே ஏற்படுத்தப்பட்டுள்ளன. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் குற்றங்களை விசாரிப்பதற்காக, அனைத்து மாவட்டங்களிலும், மாவட்டம் மற்றும் அமர்வு நீதிபதி தரத்தில் மகளிர் நீதிமன்றங்களை அமைத்துள்ளார்கள். மாவட்டத்திற்கு ஒரு நீதிமன்றம் வீதம் 32 மகளிர் நீதிமன்றங்களும், குற்றவியல் நடுவர் நீதிபதி தரத்தில் 8 கூடுதல் மகளிர் நீதிமன்றங்களும் அமைக்கப்பட்டு, செயல்பட்டு வருகின்றன. மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணைப்படி, மதுரையில் மாவட்ட நீதிபதி தரத்தில் ஒரு மகளிர் நீதிமன்றமும், குற்றவியல் நடுவர் நீதிபதி தரத்தில் ஒரு கூடுதல் மகளிர் நீதிமன்றமும் அமைக்கப்பட்டு, சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. மேலும், திருமணம் தொடர்பான வழக்குகள், குடும்ப விவகாரங்கள் ஆகியவற்றில் இணக்கத்தைக் கொண்டுவரவும், வழக்குகளை விரைந்து முடிக்கவும், மதுரையில் மாவட்ட நீதிபதி பதவித் தரத்தில் ஒரு குடும்பநல நீதிமன்றம் நன்கு செயல்பட்டு வருகிறது. இவ்வாறாக, மதுரையில் ஒரு குடும்ப நல நீதிமன்றமும், இரண்டு மகளிர் நீதிமன்றங்களும் சிறப்பாகச் செயல்பட்டுவரும் நிலையில், மேலும் கூடுதல் நீதிமன்றங்களை அமைப்பது குறித்து உயர் நீதிமன்றத்திலிருந்து எந்தச் செயற்குறிப்பும் பெறப்படவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை அவர்கள்.

திரு. இரா. அண்ணாதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்திலுள்ள நீதிமன்றத்தில் பெண் வழக்கறிஞர்களுக்கென தனியாக அடிப்படை வசதிகளை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாவட்ட நீதிமன்றத்தில் 92 Chambers உள்ளன. இதற்கு ரூ.1,000/— வாடகை வசூல் செய்யப்படுகிறது. மதுரை உயர் நீதிமன்றக் கிளையில் 104 Chambers

2015 செப்டம்பர் 28]

உள்ளன. இதற்கு ரூ.600/– வாடகை வசூல் செய்யப்படுகிறது. எனவே, இரண்டுக்கும் ஒரே மாதிரியான வாடகை, அதாவது ரூ.600/— என நிர்ணயம் செய்ய வேண்டுகிறேன். ஐந்து மாவட்டங்களிலிருந்து மதுரை உயர் நீதிமன்றத்திற்கு வழக்கு நடத்த வரக்கூடியவர்களுக்கு தனியான அடிப்படை வசதி அங்கு இல்லை. காவலர்களுக்கு தங்குவதற்கு ஓய்வு அறையும் இல்லாத நிலைமை இருக்கிறது. எனவே, மேற்கண்ட கோரிக்கைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிறைவேற்றித்தர முன்வருவார்களா என தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியிலேதான் நீதிமன்றங்களுக்காக அதிகமான நிதி ஒதுக்கப்பட்டது. இதுவரையில் 451 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து மகத்தான சாதனை படைத்துள்ளார்கள். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட கோரிக்கை சம்பந்தமாக உயர் நீதிமன்றத்திலிருந்து செயற்குறிப்பு பரிந்துரை செய்யப்படும்பட்சத்தில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்குக் கொண்டுசென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.

திரு. சு. ரவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டம் சார்ந்த தலைமை, பகுத்தறிவு சார்ந்த தலைமை, மரபு சார்ந்த தலைமை, மக்கள் ஈர்ப்பு சார்ந்த தலைமை, இவை அனைத்தும் ஒருங்கே கொண்ட மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எனது அரக்கோணம் தொகுதிக்குட்பட்ட அரக்கோணம் நகரில், ஒரு மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஒரு குற்றவியல் நடுவர் நீதிமன்றம், சார்பு

நீதிமன்றம் ஆகிய மூன்று நீதிமன்றங்கள் இயங்கி வருகின்றன. அரக்கோணம் நகரிலே ஒரு விரைவு நீதிமன்றம் அமைக்க வேண்டுமென வழக்கறிஞர்களும், பொது மக்களும் கோரிக்கை வைத்து வருகிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அரக்கோணம் நகரிலே ஒரு விரைவு நீதிமன்றத்தை அமைத்துத் தருவார்களா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10–15

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சிலே விரைந்து வழக்குகளை முடிக்க 170 புதிய நீதிமன்றங்களும், இன்னும் கூடுதலாக இந்த வருடம் 44 புதிய நீதிமன்றங்களும் ஏற்படுத்த மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட நீதிமன்றத்திற்கு உயர் நீதிமன்றத்திலிருந்து அம்மா அவர்களுடைய அரசுக்கு செயற்குறிப்பு வரும்பட்சத்தில், கண்டிப்பாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்குக் கொண்டு செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 357, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ராஜநாயகம், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

357—

கால்நடை மருந்தகத்திற்குக் கட்டடம்

***5698—திரு. மு. ராஜநாயகம்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—